# SDG 3

## 3.3.3. Shared sports facilities

### Print Media

**விளையாட்டு செய்திகள்**

## மாவட்ட அளவில் வாலிபால் போட்டி

# விளையாட்டு பல்கலை முதலிடம்

**சென்னை, ஆக. 31–**

மாவட்ட அளவிலான வாலிபால் போட்டியில், தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலை அணி வெற்றி பெற்று முதலிடத்தை பிடித்தன.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செங்கல்பட்டு மாவட்டம் ஆதரவுடன், பி.எஸ்., அப்துர் ரஹ்மான் கிரசன்ட் பல்கலை சார்பில், மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் வண்டலூரில் உள்ள பல்கலை வளாகத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு, தடகளம், கூடைப்பந்து மற்றும் வாலிபால் போட்டிகள் நடத்தப்பட்டன. ஓபன் முறையில் நடந்த போட்டிகளில், செங்கல்பட்டு மாவட்ட அளவில் உள்ள பள்ளி, கல்லூரி மற்றும் கிளப் அணிகள் பங்கேற்றன.



■ வாலிபால் போட்டியில் பங்கேற்ற அணிகள். **இடம்:** வண்டலூர்.

ஆண்களுக்கான வாலிபால் போட்டியில், தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலை முதலிடத்தையும், சி.எஸ்.ஐ., பள்ளி இரண்டாம் இடத்தையும் பிடித்தன.

பெண்களில், முதலிடத்தை காட்டாங்கொளத்தூர் எஸ்.ஆர்.எம்., பல்கலையும், தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலை இரண்டாமிடத்தையும் வென்றன.

அதேபோல், ஆண்களுக்கான கூடைப்பந்து போட்டியில், அன்பவுண்ட் கிளப் அணி முதலிடத்தையும், பி.எஸ்., கிரசன்ட் பல்கலை இரண்டாம் இடத்தையும் வென்றன.

பெண்களில், ராஜேஸ்வரி அரசு கல்லூரி முதலிடத்தையும், எஸ்.ஆர்.எம்., பல்கலை இரண்டாமிடத்தையும் வென்றன.

முன்னதாக நடந்த தடகளப் போட்டிகளில் ஏராளமான மாணவ – மாணவியர் பங்கேற்றனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, பி.எஸ்., அப்துர் ரஹ்மான் கிரசன்ட் பல்கலை துணை வேந்தர் பீர் முகமது, பதிவாளர் ராஜா உசைன், உடற்கல்வி இயக்குனர் செல்வம் மற்றும் மாவட்ட விளையாட்டு நல அலுவலர் ரமேஷ் உள்ளிட்டோர் பரிசுகளை வழங்கினார்.

# 75வது சுதந்திர தின 2.0 ஓட்டம்

## கலெக்டர் துவக்கி வைத்தார்

செங்கல்பட்டு, செப்.12: செங்கல்பட்டு கலெக்டர் அலுவலகத்தில், 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, 2.0 ஓட்டம் நேற்று நடந்தது. கலெக்டர் ராகுல்நாத் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

செங்கல்பட்டு கலெக்டர் அலுவலக வளாகத்தில் 75வது சுதந்திர தின விழாவை கொண்டாடும் விதமாக நேரு யுவகேந்திரா, நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஒருங்கிணைந்து சுதந்திர தின 2.0 ஓட்டத்தை கலெக்டர் ராகுல்நாத் நேற்று கொடியசைத்து துவங்கி வைத்தார்.

அனைத்து மக்களும் குறைந்தது 30 நிமிடம் உடற்பயிற்சிக்கு நேரம் ஒதுக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், காலை 7.30 மணியாவில் (3 கிமீ) தொடங்கி எஸ்பி அலுவலகம் வழியே சென்று மீண்டும் கலெக்டர் அலுவலகத்தில் முடிவடைந்தது.

இதில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் என 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்த ஓட்டத்தில் உடற்பயிற்சியின் அவசியம், உடற்பயிற்சியின் நலன்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.



2.0 ஓட்டத்தை கலெக்டர் ராகுல்நாத் கொடியசைத்து துவங்கி வைத்தார்.

மேலும், செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் இன்று நடக்கும் கொரோனா சிறப்பு தடுப்பூசி முகாமில், 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசி செலுத்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தி, கொரோனா தடுப்பூசியின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தொடர்ந்து, ஓட்டத்தில் பங்குபெற்று முதல் 3 இடம் பிடித்த மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை கலெக்டர் ராகுல்நாத் வழங்கினார்.

நிகழ்ச்சியில், கலெக்டரின் நேர்முக உதவியாளர் லட்சுமணன், செங்கல்பட்டு ஆர்டிஓ சாகிதா பர்வின், செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் ராஜலட்சுமி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் எஸ்.ரமேஷ், நாட்டு நலப்பணி அலுவலர் டாக்டர் பிரகாஷ், மாவட்ட இளைஞர் அலுவலர் சரவணன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு கழக நீச்சல் பயிற்சியாளர் ஆனந்த், பாரதியார் இளைஞர் நலத்தலைவர் சுரேந்தர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

## 'பெடரேசன்' கோப்பை இலக்குப்பந்து போட்டி

# தமிழக அணி வெண்கலம் வென்றது

**சென்னை, ஏப். 27–** உத்தர பிரதேச மாநிலத்தில் நடந்த 'பெடரேசன்' கோப்பைக்கான தேசிய இலக்குப்பந்து போட்டியில், தமிழக அணிக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

இந்திய இலக்குப் பந்து கூட்டமைப்பு சார்பில், பெடரேசன் கோப்பைக்கான ஆறாவது இலக்குப் பந்து போட்டிகள், கடந்த 22ம் தேதி முதல், 24ம் தேதி வரை உ.பி., மாநிலம் மதுராவில் நடந்தன.

இந்த போட்டிகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் தலா எட்டு அணிகள் பங்கேற்று அசத்தின. போட்டியானது 'லீக்' மற்றும் 'நாக் – அவுட்' முறையில் நடந்தது.

தமிழக இலக்குப் பந்து சங்கம் சார்பில், தமிழக பெண்கள் அணியினர் பங்கேற்று, லீக் மற்றும் நாக் அவுட் போட்டிகளில் வெற்றி பெற்றனர். அதன் தொடர்ச்சியாக, மூன்றாவது இடத்திற்கான போட்டிக்கு தகுதி பெற்றனர்.

இதில், தமிழக அணி – தெலுங்கானா அணி இடையே பலப்பரீட்சை நடந்தது. அதில், 6 – 5 என்ற புள்ளிக் கணக்கில், தமிழக அணி வெண்கல பதக்கம் வென்றது.






■ இலக்குப்பந்து போட்டியில் வெண்கல பதக்கம் வென்ற தமிழக அணி. இடம்: மதுரா, உ.பி., மாநிலம்.



6வது இலக்குப்பந்து கூட்டமைப்பு போட்டி (Targetball Federation Cup)(ஆண்கள் மற்றும் பெண்கள்) ஜிஎல் பல்கலைகழகத்தில், மதுரா, உத்தர பிரதேஷ் மாநிலத்தில் 22042022 முதல் 24042022 வரை நடைபெற்றது. இந்த போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் தல 8 அணிகள் கலந்து கொண்டனர். இந்த போட்டியானது லீக் மற்றும் நாக் அவுட் முறையில் நடைபெற்றது. தமிழக இலக்குப்பந்து கழகத்தின் சார்பாக போட்டியிட்டு பெண்கள் அணி மூன்றாவது இடத்தைப் பிடித்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் சவீதா பல்கலைகழகத்தில் பயிலும் மாணவ மாணவிகள் மற்றும் BSஅப்துர் ரஹ்மான் மாணவிகள் தமிழக அணியில் பங்கேற்ற வீரர் வீராங்கனைகளை இலக்குப்பந்து கழகத்தின் பொதுச் செயலாளர் முனைவர். க.பா. ஜமால் ஷரிப் மற்றும் நிர்வாகிகள் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

## Letter received from District Collector – Regarding Sports

The Department of Physical Education **BS Abdur Rahman Crescent Institute of Science & Technology** & **Sports Development Authority of Tamil Nadu, Chengalpattu** Jointly Organized District Level Tournaments for the Celebration of National Sports Day 2022 to commemorate the birth anniversary of hockey legend, Major Dhyan Chand.



அனுப்புநர்

திரு. ஆர். ராகுல்நாத், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
செங்கல்பட்டு மாவட்டம்.

பெறுநர்

பதிவாளர்
கிரசண்ட் பல்கலைக்கழகம்
வண்டலூர்,
செங்கல்பட்டு மாவட்டம்.

ந.க.எண்.105/2022 , நாள்-22.08.2022

அய்யா,

பொருள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், செங்கல்பட்டு மாவட்டம், தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு - போட்டிகள் நடத்தி கொண்டாடுவது - தொடர்பாக.

பார்வை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், உறுப்பினர் செயலர், அவர்களின் அறிவுரை நாள் - 21.08.2022

-----------

மேயர் தயான் சந்த் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்டு 29ஆம் தேதி தேசிய விளையாட்டு தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. அதேபோல் இந்த ஆண்டும் 29.08.2022 அன்று வண்டலூரில் உள்ள தாங்கள் பல்கலைக்கழகத்தில் தடகளம் (100m, 400m, 1500m, Long Jump, Shot put, Discuss), வாலிபால், கூடைப்பந்து போன்ற போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்கள் / பள்ளி மாணவ/மாணவிகள், கல்லூரி மாணவ/மாணவிகளுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தி கொண்டாடப்பட உள்ளது. இப்போட்டியை சிறப்பாக நடைபெற உதவிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் இது தொடர்பாக தங்களைத் தொடர்பு கொள்வார்.

3/3

மாவட்ட ஆட்சித்தலைவர்,
செங்கல்பட்டு

22.8.22

To
Director/Sports
Pl do the needful
24/8/22

Dept. of Physical Education
BSA CRESCENT IST, Chennai-48

SHOT ON POCO X3

## Requisition Letter received from President of Tamilnadu Target Ball Association


# TAMIL NADU TARGETBALL ASSOCIATION

Affiliated to: - BHARTIYA TARGETBALL ASSOCIATION (REGD.)

Jamal Sherif. G. F. General Secretary

Email ID: tntargetball@gmail.com / tamilnadutargetball@rediffmail.com

Mobile No: 09840324465



President
Mr. R.Nehru

Senior Vice-President
Dr.S.Thirumalaikumar

General Secretary
Mr. Jamal Sherif G F

Treasurer
Mr.N.MahaboopBasha

Vice-President
Mr.Ganeshkumar
Mr. S.ShyamSundar

Joint Secretary
Dr.A.Manoj Kumar
Mr.A.Jairamji
Dr.P.Muthukumar
Mr.V.Dhanasekaran

EC Member
Mr.Derick A Philips
Ms.R.Ramya
Ms.S.Mageswaei
Mr.M.Annamalai
Mr.D.Alwin
Mr.M.T.Kumaresan

Technical Committee
Dr.C.Manoj
Dr.R.Purushothaman
Mr.M.Inbarajan
Ms.S.Mageswaei
Ms.S.Priya


Ref: No.001/State Level/BSACIST/2020-2021/08.12.2020

To

Dr. S. Selvakumar
Director
Department of Physical Education
BSA Crescent Institute of Science and Technology
Vandalur, Chennai 48.

Sub: - First State level Targetball Shooting Competition -Regarding

Respected Sir

Tamil Nadu Targetball Association is willing to organize 1st State level Targetball Shooting Competition for Men and Women in your prestigious Institution on 20th December 2020 (Sunday). The event will be conducted for the categories namely Under 14, Under 17, Under 19, Under 21 and Open to All.

So, we need your permission and cooperation for conduct of this Event. Also your BSACIST students will get a chance to represent Tamil Nadu Targetball Association team through this event, get Name and Fame for BSACIST and Tamil Nadu.

Thanks with Regards

JAMAL SHERIF G.F)
General Secretary
TNTA

Submitted to Deputy Registrar

8/12/2020
(Dr. S. SELVAKUMAR)